1970 ஆகஸ்ட் 26]

ஆண்டுகளுக்கு தேவையானல் நீடிக்கலாம் என்று கையெழுத்துப் போட்டிருக்கிறது. ஆனல் அரசு துறைமுகத்திற்கு இந்த நிலம் தேவை என்று, வெளியேற்றம் நடவடிக்கையில் ஈடுபட்டிருக்கிறது.

Sri Kappaleeswarar Temple Tank

* 58 Q.—THIRU K. VINAYAKAM : Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state—

(a) whether a scheme of silt removing was carried out in the Tank of Sri Kapaleeswarar Temple in Mylapore, Madras; and

(b) if so, what was the expenditure involved?

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா : (அ) ஆம்.

(இ) சென்னை, மயிலையில் உள்ள ஸ்ரீகபாலீஸ்வரர் கோவில் குளத்தில் தூர் எடுக்கும் பணி தொடர்பாக ரூ. 500 செலவிடப் பட்டது.

திரு. கே. விநயகம் : சார், இந்த கபாலீஸ்வரர் கோவில் குளத்தை ஆழம் செய்தபோது, மாண்புமிகு முதல் அமைச்சரும் சேர்ந்து கொண்டு கையில் மம்மட்டியும், கட்டப்பாரையும் பிடித்து, மண் எடுக்கும் போது, ஒரு பொருள் கிடைத்ததாமே, ஒரு புதை பொருள். அது யாரைச் சேர்ந்தது? யார் எடுத்துக் கொண்டார் கள்? கோவிலில் கொடுத்தார்களா? என்ன பொருள் இருந்தது, அது என்னவாயிற்று? அதை விளக்க முடியுமா?

மாண்புமிகு திரு. மு. கருணநிதி : ஒரு சிறிய உண்டியல், புதுக் காசுகளோடு இருந்தது, யாரிடமும் கொடுக்கப்படவில்லை. விநயகர் கோவிலுக்குத் தருவதாக இருக்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : கேள்வி எண் 59 ஒற்றி வைக்கப்படுகிறது.

பழங்காநத்தம் தொழிலாளர் நல ஈட்டுறுதி மருத்துவ மனை

*60 வின.—திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு தொழிலாளர் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க் கண்ட வினக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை, பழங்காநத்தத்திலுள்ள E. S. I. மருத்துவமனை எந்தத் தேதியிலிருந்து செயல்பட்டு வருகிறது?

(இ) அந்த மருத்துவமனைக்குத் திறப்பு விழா எப்போது நடைபெற்றது?

மாண்புமிகு திரு. கா. வேழவேந்தன் : (அ) தொழிலாளர் நல ஈட்டுறுதி மருந்தகம் பழங்காநத்தத்தில் தனிப்பட்டவர்க்குச் சொந்தமான ஒரு வாடகைக் கட்டிடத்தில் 28–10–1956 முதல் செயல் படத் தொடங்கியது. அரசுக்குச் சொந்தமான கட்டிடத்தில் 12-2-1966 முதல் செயல்படத் தொடங்கியது.

(இ) இப் புதிய மருந்தகத்தைத் திறப்பதற்கென விழா ஏதும் நடத்தப்படவில்லை. பழங்காநத்தம், பொன்னகரம், திருநகர், முனிச்சாலைரோடு, பாவை ஆகிய இடங்களில் தொழிலாளர் நல

ஈட்டுறுதி மருந்தகங்களுக்கெனக் கட்டப்பட்ட கட்டிடங்களைத் திறப்பதற்கான விழா 3-6-1969 தேதியன்று மதுரை, அதைச் சார்ந்த புறநகர்களிலுள்ள ஈட்டுறுதி செய்து கொண்டோர் குடும்பத்தினருக்குத் தொழிலாளர் நல ஈட்டுறுதி செய்து கொண்டோர் குடும்பத்தினருக்குத் தொழிலாளர் நல ஈட்டுறுதிப் பணி திட்டத்தை நீட்டிக்கும் ஆரம்ப விழாவோடு இணைக்கப் பட்டது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினக்கள்-விடைகள் முடிவுற்றன.

குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப் பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.

(3) அறிவிப்புகள்.

(அ) அரசின் போலீஸ் அடக்கு முறைக் கொள்கையைக் கண்டிக்கும் தீர்மானம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப் பினர் திரு. எம். சுரேந்திரன், திரு. என். சங்கரய்யா, திரு. க. ர. நல்லசிவன். திரு. சோ. அழகர்சாமி ஆகியோர் சேர்ந்து, சட்டப் பேரவையின் விதி 55-ன் கீழ்க்கண்டவாறு ஒரு கண்டனத் தீர் மானம் கொடுத்திருக்கிறார்கள்—

"குறிப்பாக அரசின் போலீஸ் அடக்குமுறைக் கொள்கையை சட்டப் பேரவை கண்டிக்கிறது. அரசின் கொள்கையை ஏற்க மறுக்கிறது."

இதே போன்று மாண்புமிகு உறுப்பினர்கள், திருவாளர்கள் என். சங்கரய்யா, எம். சுரேந்திரன், க. ர. நல்லசிவன், சோ. அழகர் சாமி ஆகியோர் தனித் தனியாகவும் கண்டனத் தீர்மானங்கள் கொடுத்திருக்கிறார்கள்.

கண்டனத் தீர்மானம் பற்றிய நமது தமிழ்நாடு சட்டப் பேரவை நடைமுறை விதி 55-ஐப் பேரவைக்குப் படித்துக் காட்ட விரும்பு கிறேன்.

விதி 55 (1) கூறுவதாவது:

(1) A motion expressing want of confidence in the Ministry or a motion disapproving the policy of the Ministry in a particular respect may be made with the consent of the Speaker and subject to the following restrictions, namely :—

(*a*) leave to make the motion must be asked for after questions and before the further business set down in the list of business for the day is entered upon;

(*b*) the member asking for leave must before the commencement of the sitting of the day, leave with the Secretary a written notice of the motion which he proposes to make.